



# නිදහස් මාධ්‍ය

## නිදහස් නිවහල් දේශයක් උදෙසා


ගවේෂණාත්මක
පැහැදිලිව
සංවේදීබව
පෙළගැස්ම
වෘත්තීය
අයිතීන්
නියාමනය
පෙරළිකාරිත්වය
ප්‍රේක්ෂක විශ්වසනීයත්වය
ආචාරධර්ම
ආකල්ප
මර්දනය
හෘද සාක්ෂිය
සමබරව
වාරණය
ආයතන ප්‍රධානීන්
මූලාශ්‍රවල රහස්‍යභාවය
ප්‍රතිපත්ති
අභියෝග
සමාජ ආකල්ප
නිර්මාණාත්මකබව
ජයගැනීම
මාධ්‍ය
භාෂණයේ නිදහස
තර්ජන
ජාත්‍යන්තර සම්මුතීන්
සත්‍යය සහ අවබෝධය
කුතුහලය
තහනම
අතික්‍රමනය
මහජන මතය
අවධානය
තොරතුරු




© රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව

ISBN 978-955-9073-20-8

ප්‍රධාන සංස්කාරක
මහාචාර්ය ආරියරත්න ඇතුගල

සංස්කරණය
මහාචාර්ය රෝහණ ලක්ෂ්මන් පියදාස
ජ්‍යේෂ්ඨ කථිකාචාර්ය විජයානන්ද රූපසිංහ

නිර්මාණ සැලසුම
අනුහස් මහවලගේ

මුද්‍රණය
රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව

ප්‍රකාශනය
රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව

# පටුන

පිටුව

13 ප්‍රකාශන නිදහස ගැන සම්භාව්‍ය සාහිත්‍යයෙන්
මහාචාර්ය චන්ද්‍රසිරි රාජපක්ෂ

20 භාෂා භාවිතයේ නිදහස පිළිබඳ බෞද්ධ ආකල්පය
සමන් රාජපක්ෂ

32 ජාතික නිදහස හා ප්‍රකාශන නිදහස-
පුරෝගාමීන්ගේ මෙහෙවර විමසා බැලීමක්
මහාචාර්ය රෝහණ ලක්ෂ්මන් පියදාස

42 නිදහස් චින්තනය, ජනමාධ්‍ය නිදහස සහ ජාතික නිදහස
ආචාර්ය සේන නානායක්කාර

52 **Media Freedom Activists and Democracy Vendors**
Dr. Kalinga Seneviratne

61 මාධ්‍ය නිදහස් ගමන් මඟ - සටහන් සමුදායක්
සම්මානිත මහාචාර්ය සුනන්ද මහේන්ද්‍ර

68 ஊடகங்களின் சுயகட்டுப்பாடு
கலாநிதி. சி. ரகுராம்

73 ඡායාරූපකරණය සහ ආචාරධර්ම
මහාචාර්ය ධම්මික ගංගානාත් දිසානායක

83 මානව හිමිකම්, රූපවාහිනී මාධ්‍ය ආචාරධර්ම
සහ එහි භාවිතයේ ප්‍රායෝගික ගැටලු
අරුණ ලොකුලියන

97 මානව හිමිකම්හි ප්‍රායෝගික සමාජ භාවිතය
කුමේෂ් ප්‍රභාෂිණී ගමගේ

104 ප්‍රකාශන නිදහස ප්‍රායෝගික යථාර්ථයක්ද?
මහාචාර්ය මාපා තිලකරත්න

109 ජනමාධ්‍ය පාලනය වන්නේ නීතියෙන් පමණක්ද?
අසිත ප්‍රභාත් මල්ලවආරච්චි

**கலாநிதி. சி. ரகுராம்**
சிரேஷ்ட விரிவுரையாளர் –
தொடர்பாடல் கற்கைகள்திருகோணமலை வளாகம் கிழக்குப்
பல்கலைக்கழகம்



# 'ஊடகங்களின் சுயகட்டுப்பாடு'
## (Media Self-Regulation)

**ஊடக சுதந்திரம் – வெளியும் வரையறைகளும்**
(Media Freedom – Space and Limitations)

ஊடக சுதந்திரம் தொடர்பில் இன்று உலகளாவிய கவனம் அதிகளவில் செலுத்தப்படுகிறது. ஜனநாயகத்தின் உறுதிப்பாடாக ஊடகங்களின் சுதந்திரமான செயற்பாடு கருதப்படும் அதேவேளை, ஒரு நாட்டில் நிலவக்கூடிய ஜனநாயக ஆட்சியை மதிப்பிடும் அளவுகோலாகவும் ஊடக சுதந்திரம் கணிப்பிடப்படுகிறது. அந்தளவில் ஊடக சுதந்திரத்தின் முக்கியத்துவம் ஜனநாயக விழுமியங்களின்பால் இரண்டறக் கலந்து இயைபாக்கம் அடைந்திருக்கிறது.

ஒவ்வொரு நாட்டினதும் சட்டவாட்சி வழியேயும், அரசியலமைப்பிலும் சர்வதேச அளவில் ஐக்கிய நாடுகள் அவையினதும் மனித உரிமை அமைப்புக்களதும் பிரகடனங்களிலும் கருத்து வெளிப்பாட்டுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பும், அது அடிப்படை மனித உரிமைகளுள் ஒன்றாகச் சிறப்பிக்கப்பட்டிருப்பதும் – ஊடக சுதந்திரம் தொடர்பிலான சட்ட மற்றும் அரசியலமைப்புப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்றன. 1

அதேவேளை, இது தனியே ஊடகங்களுக்கான சுதந்திரத்தை மாத்திரம் கணிப்பிலெடுக்கும் வரையறையிலிருந்தும் விலகி, தனிமனித சுதந்திரத்தின் வெளிப்பாடாகவும் அந்த சுதந்திரத்தின் அளவு மீது நேரிடைத் தொடர்பினைக் கொண்டிருப்பதாகவும், மனித உரிமை ஆர்வலர்களால் நோக்கப்படுவது, ஊடக சுதந்திரம் மீதான முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கிறது.

'ஊடகங்களின் சுயகட்டுப்பாடு'

ஆனால், யதார்த்தத்தில் ஊடக சுதந்திரம் எந்தளவுக்குப் பேணப்படுகிறது, ஊடகங்கள் தமக்கான கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை அனுபவிக்கக்கூடியதாக இருக்கிறதா என்ற கேள்விகள் எழுவதும் தவிர்க்க முடியாததாகிறது. குறிப்பாக, ஊடக சுதந்திரம் முக்கிய அடையாளக்குறியீடாக விளங்கும் ஜனநாயகத்தில், ஊடகங்கள் தமக்குரிய கௌரவமான, கண்ணியமான இடத்தைத் தக்கவைப்பது பெரும் போராட்டமாக இருப்பது மாத்திரமின்றி – ஊடக சுதந்திரத்தின் அப்பட்டமான மீறல்களாக ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் அச்சுறுத்தல்களும் உயிர்ப்பலி கொள்ளும் அளவுக்கான வன்முறைப்போக்கும் கட்டவிழ்த்து விடப்படுவது ஊடகங்கள் மீதான சுதந்திரத்தைக் கேள்விக்குள்ளாக்குகின்றன.

கருத்து வெளிப்பாடு மீதான மதிப்பும் சகிப்புத்தன்மையும் அல்லது கருத்தைக் கருத்தால் எதிர்கொள்ளும் திராணியும் மிகக்குறைந்துவிட்ட சமூகத்தில் ஊடக சுதந்திரத்தின் இருப்பு மீதான சந்தேகங்கள் வெளிப்படும் அதேவேளை, ஆக இயலுமான வகையிலாவது ஊடக சுதந்திரத்திற்காகப் போராடும் கட்டாயத்தில் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் இருப்பதை மறுக்கமுடியாதிருக்கிறது.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும் ஒரு சமூகத்தில் மாத்திரமே தனிமனித சுதந்திரங்களும் சாத்தியமாகும் என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளும் இடத்து – ஊடக சுதந்திரத்திற்காகப் போராடுவது என்பது ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் மாத்திரமே உரித்தான கடமை என்ற நிலையிலிருந்தும் விலகி, சிவில் சமூகமும் மக்களும் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் முயற்சிகளுக்கு உறுதுணையாயிருக்க வேண்டியது அவசியமாகிறது. அதுவே ஊடகங்கள்வழி ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்குமான வழியுமாகும்.

இதேவேளை, ஊடக சுதந்திரத்தின் பேரால் அதீதமான அல்லது தாம் நினைத்தையெல்லாம் செய்யக்கூடிய, மீறல்கள் நிறைந்த கருத்து வெளிப்பாட்டுச் சூழல் ஒன்றைக் கட்டமைக்க சில ஊடகங்கள் முயல்வதும் கருத்திலெடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

சுதந்திரம் என்பது அவசியமானது என்பதுடன், அதன் வரையறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் வேளையிலேயே – சுதந்திரம் என்பது மற்றையவர்களைப் பாதிக்காத

சுதந்திரமாக இருக்கும் என்ற கருத்திற்கமைய – ஊடக சுதந்திரத்தின் ஒரு முக்கிய அங்கமாக, ஊடகங்கள் தமக்கான சுதந்திரத்தை எவ்வாறு வரையறுத்துக் கொள்ள வேண்டும் என்பதை, 'ஊடகங்களின் சுயகட்டுப்பாடு' (Media Self- Regulation) வலியுறுத்துகிறது.

ஊடகங்களின் சுயகட்டுப்பாடு
(Media Self -Regulation)

மக்கள் அரச ஆளுமையில் பங்கெடுக்கக்கூடிய நிலையை ஊக்குவிக்கும் பணிக்கும் தமது மிகப்பாரிய பலத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடிய நிலையைத் தவிர்க்கும் நியாயமான வரையறைகளுக்கும் இடையிலான சமநிலையை முன்னகர்த்துவதாக ஊடகங்களின் சுயகட்டுப்பாடு அமைகிறது. 2

எங்கெல்லாம் மிகப்பாரிய பலம் செறிந்துள்ளதாகக் கருதப்படுகிறதோ, அங்கெல்லாம் அந்தப் பலத்தின் பேரால் தவறுகளும் துஷ்பிரயோகங்களும் இடம்பெறுவதும் உண்மையாயிருக்கிறது. இது அரசியலுக்கு மாத்திரமல்ல ஊடகங்களுக்கும் பொருத்தமானதே. மிகப் பரந்த அளவிலும் மிகத் துரிதமான வகையிலும் பெருந்தொகை மக்களை அணுகக்கூடிய, அவர்களது கருத்தியல்களில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய ஊடகப்பலம் இன்று நிதர்சனமாகியிருக்கிறது. குறிப்பாக, இலத்திரனியல் ஊடகங்களும், புதிய/இணைய ஊடகங்களும் இந்தச் செல்நெறியில் சமீப காலங்களில், பூகோள அளவில் தமது பாதிப்புக்களை எடுத்துக்காட்டியிருக்கின்றன. 3

இத்தகைய பலம், ஊடக சுதந்திரத்தின் பேரால் மாறுபட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும், தமது நியாயமான செயற்பாடுகளுக்கு மாத்திரமே ஊடக வலையமைப்பு உதவுவதையும் ஊடகங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஊடகங்கள் தமக்கான நியாயபூர்வமான கட்டுப்பாடுகளைத் தாமாகத் தமக்கு விதித்துக்கொள்ளத் தவறும் பட்சத்திலேயே, வெளியிலிருந்தான தலையீடுகள் தமக்குரிய நியாயத்தைத் தேடிக்கொள்கின்றன என்பதையும் அவை கருத்திற்கொள்ள வேண்டும்.

சரியான தகவல்களை வழங்குவதற்கான உரிமையைக் கொண்டிருக்கும் ஊடகங்கள், தவறான தகவல்களை வழங்கும் உரிமை தமக்கு இல்லாதிருப்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

தனிநபர்களையும் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையையும் இலக்குக் கொண்ட செய்திகளை வெளியிடும்போது, மிகக் கவனமான பிரயோகங்களை ஊடகங்கள் கொண்டிருக்கவேண்டியது இங்கு மிகக்குறிப்பிட வேண்டியிருக்கிறது.

அதே போன்று, பல்லின சமுதாயங்கள் வாழக்கூடிய சமூகத்தில், குறிப்பாகப் போரின் பின்னரான இலங்கை போன்ற சமூகத்தில் முரண்பாட்டு உணர்திறன்மிக்க ஊடகவியலின் (Conflict Sensitive Journalism) பெறுமதியை ஊடகங்கள் தமது பயன்பாட்டுக் களத்திற்கு எடுத்துவர வேண்டிய தேவை பெருகியிருக்கிறது. இன, மத, மொழி ரீதியான பிரிவுகள் நிறைந்த சமூகத்தில் செய்திகள் செய்திகளாக மாத்திரமன்றி, அவை மக்களிடையே ஒன்றிணைப்புக்களையும் பிளவுகளையும் வலுப்படுத்த வல்லவையாகவும் இருப்பதை இங்கு கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

அரசியல் தவிர்ந்த ஊடகப்பயன்பாடு என்பது இன்று வெறுமனே எழுத்துக்களில் மாத்திரமே சாத்தியாமாகக்கூடிய நிலையில், இயலுமான வகையில் அரசியல் தொடர்பாடலை (Political Communication) தகுந்த சமநிலையுடன் அணுகும் போக்கை ஊடகங்கள் நெறிப்படுத்தும் தேவையும் எழுந்திருக்கிறது. குறிப்பாக, தேர்தல்கள் போன்ற சமநிலைப் பண்பு அதிகம் பேணப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் ஊடகங்களின் போக்கு தொடர்பில் அதிகம் பேசப்பட வேண்டியுள்ளது. விளம்பரங்கள் மாத்திரமின்றி, கட்டணம் செலுத்தப்பட்ட செய்திகள் அல்லது விலைக்கு வாங்கப்பட்ட செய்திப்பக்கங்கள், செய்திக் கட்டுரைகள் (Paid News and News Articles) – அரசியல் தொடர்பாடலில் ஊடகங்களின் பணியைக் கொச்சைப்படுத்திவருவதை ஊடக அறநெறி அனுமதிக்க முடியாது.

ஊடக சுய கட்டுப்பாடு, முதன்மையும் முக்கியமானதுமான ஊடக செல்நெறியைத் தீர்மானிக்கக்கூடிய சட்டரீதியான தலையீடுகளுக்கு அப்பால் – பெறுநர்கள், நலன் விரும்பிகள், ஊடக உரிமையாளர்கள், விளம்பரதாரர்கள், சக தொழிலாண்மையாளர்கள், சிவில் சமூகம் என பலதரப்பிலிருந்துமான செல்வாக்குகளுக்கு உட்பட்டே இயங்கிவருகிறது. இங்கு, இந்தச் செல்வாக்குகள், தனியே செல்வாக்குகள் என்ற நிலையிலிருந்து மேலெழுந்து 'பொறுப்புமிக்க செல்வாக்குகள்' (Responsible Influences) என்ற நிலைக்கு வரும்போதே அல்லது அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும்போதே – ஊடக சுய கட்டுப்பாடு, தகுந்த பெறுதிகளைத் தரக்கூடியதாக அமையும். அந்தவகையில், இங்கு ஒரு 'கூட்டுப் பொறுப்புணர்வு' (Joint Responsibility) வேண்டியிருப்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது.

இவற்றைக் கருத்திற்கொண்டு, ஊடகங்கள் தமக்கான பொறுப்புக்கூறலை (Accountability) உறுதிப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை, தன்னார்வத்தின்வழியே தாமாக உருவாக்கும் பொறிமுறைக்கிணங்க (Voluntary Mechanism) அமைத்துக்கொள்வதே சாலச் சிறந்ததாகும். இவ்வாறன பொறிமுறையொன்றே யதார்த்தமானதாகவும் , குறித்த ஊடகங்களின் பார்வையில் நடைமுறைச் சாத்தியமானதாகவும் அமையும். 4

இது, ஊடக சுயகட்டுப்பாடு (Media Self-Regulation) என்னும் நிலையிலிருந்தும், குறிப்பாக – பத்திரிகை முறைப்பாட்டுச் சபை (Press Complaints Commission) போன்ற

அமைப்புக்களிலிருந்தும் இன்னும் முன்னேறி, ஊடகங்கள் தமதளவில் தமக்கான ஒரு ஊடக சுய அடக்கம் (Media Self-Control) என்பதை நோக்கியதாக இருப்பின் இன்னும் சிறப்புடையதாக இருக்கமுடியும்.

இப்பொறிமுறை ஒவ்வொரு ஊடகத்திற்கும் அவற்றின் செயற்பாட்டுப்பரப்பு குறித்தும், அவற்றின் ஊடகக்கொள்கைகள் குறித்தும் வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்டதாக இருந்தாலும், பொதுவில் – அடிப்படையான ஊடக அறநெறிகள், அவற்றின் பொதுப் பண்புகளாக அமைய முடியும்.

அதேவேளை, இப்பொறிமுறையானது, ஊடகச் செயற்பாட்டின் இரு நிலைகளிலும் இயங்கமுடியும். ஒன்று – வெளிப்பாட்டுக்கு முன்னரான நிலை. மற்றையது – வெளிப்பாட்டுக்குப் பின்னரான நிலை. இவ்விரு நிலைகளிலும், ஒரு செய்தியை வெளிப்படுத்துவதற்கு முன்னர் இப்பொறிமுறை முறையாக இயங்குமாக இருந்தால், இரண்டாம் நிலைக்குத் தேவை ஏற்பட மாட்டாது. இது, கிட்டத்தட்ட 'வருமுன் காப்போம்' பொறிமுறைக்கு ஒப்பானது. இது, குறித்த ஊடகத்தின் நற்பெயரையும் காக்கக்கூடியது. அதேவேளை, மனிதத் தவறுகளுக்கான வெளியானது ஊடகங்களிலும் இருப்பதால், நேர்ந்துவிட்ட தவறுகளுக்கு பிராயச்சித்தம் தரும் வெளியை இரண்டாம் நிலை தந்துவிடமுடியும்.

இப்பொறிமுறைகள், ஏற்கனவே வெவ்வேறு படிநிலைகளில் ஊடகங்களில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், முழுமையான தன்னார்வப் பொறிமுறையொன்றின் தேவை ஒவ்வொரு ஊடகங்களுக்கும் இன்று அவசியமாகவுள்ளதை எடுத்துகூறவே வேண்டியுள்ளது. அதுவே, ஊடகங்களின் தொழில்சார் பண்பையும் (Professional Journalism) உயர்த்திச்செல்லும்.




රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
www.news.lk

ISBN 978-955-9073-20-8

රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව